# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவாடானை

## ஆண்டறிக்கை

திருவாடானை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, 13.9.2013 அன்று தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வர் மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் காணொளிக் காட்சி வழியாகத் தொடங்கப்பெற்றது. இக்கல்லூரியின் எழில் மிகு புதிய கட்டிடம் 2.7.2019 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அன்று முதல் இக்கல்லூரி புதிய கட்டிடத்தில் நிறைந்த வசதிகளுடன் இயங்கி வருகிறது. இக்கல்லூரியில் பி.ஏ. தமிழ், பி.ஏ. ஆங்கிலம், பி.காம், பிஎஸ்.சி. கணிதம், பிஎஸ்.ஸி கணினி அறிவியல் ஆகிய பட்டப்படிப்புகளும், இவ்வாண்டில் புதிதாக பி.காம் தமிழ்வழி பாடப்பிரிவு, பிஎஸ்.ஸி விஷுவல் கம்யூனிகேசன் ஆகிய இளநிலை பாடப்பிரிவுகளும், எம்.ஏ தமிழ், எம்.எஸ்.ஸி கணிதம் ஆகிய முதுநிலை பாடப்பிரிவுகளும் கற்பிக்கப்பெற்றுவருகின்றன.

இக்கல்வியாண்டில் அறுபது மாணவ மாணவிகள் தங்களின் இளநிலை படிப்பினை முடித்து பட்டங்களைப் பெற்றுள்ளனர். 29.3.2019 அன்று நடைபெற்ற இப்பட்டமளிப்பு விழாவில் மதுரை மண்டல கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர் அவர்கள் கலந்து கொண்டார்.

## ஆசிரியர் அலுவலர்களின் இடப்பெயர்வும், பணியேற்பும்

இக்கல்லூரியில் 2018-19 ஆம் கல்வியாண்டில் முதல்வராகப் பணியாற்றிய முனைவர் மோ. கி. இராஜ்குமார் அவர்கள் முதல்நிலை முதல்வராக முசிறி அரசு கலைக் கல்லூரிக்குப் பதவி உயர்வு பெற்றுப் பணியாற்றிவருகிறார். 1.6.2018 அன்று முனைவர் சூ. வானதி அவர்கள் மேலூர் அரசு கலைக்கல்லூரியிலிருந்து பதவி உயர்வு பெற்று இக்கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்று, 2.7.2018 அன்று முதல் நிலை முதல்வராகப் பதவி உயர்வு பெற்று மதுரை ஸ்ரீ மீனாட்சி அரசு கலைக்கல்லூரியில் பணியாற்றி வருகிறார்கள். 1.8.2018 அன்று திண்டுகல் எம்.வி. எம் கல்லூரியின் வணிகவியல் துறைத் தலைவராக விளங்கிய முனைவர் ம. சுப்பிரமணி அவர்கள் இக்கல்லூரியின் முதல்வராக பதவி உயர்வுபெற்றுப் பணியேற்றி வருகிறார்.

கணினி அறிவியல் துறையில் பணியாற்றிய முனைவர் து. சுந்தர் அலுவலகத்தில் பணியாற்றிய இளநிலை உதவியாளர் செல்வி அ. லெட்சமி ஆகியோர் பணிமாறுதல் பெற்றுள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல் துறையில் பணியாற்றிய திருமதி சு. செந்தமிழ்ச்செல்வி, திருமதி ரா. மங்கையர்க்கரசி ஆகியோர் இக்கல்லூரிக்கு பணிநிரவல் அடிப்படையில் பணியேற்றுள்ளனர். திருமதி ரா. ரோகினி, திருமதி அ. மகேஸ்வரி ஆகியோர் முறையே இளநிலை உதவியாளர் தட்டச்சர் பணிகளில் புதிதாகச் சேர்ந்துள்ளனர்.

30.3.2019 அன்று இக்கல்லூரியின் நிதியாளராகப் பணியாற்றிய திரு பிரான்சிஸ் அவர்கள் பணி ஓய்வு பெற்றார்.

**மாணவ மாணவியர்களின் எண்ணிக்கையும் கல்வி உதவித்தொகையும்**

2018-19 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரியில் மொத்தம் 822 மாணவ மாணவியர்கள் பயின்று வருகிறார்கள். இவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் உரியமுறையில் கல்வி உதவித்தொகை வழங்கப்பெறுகிறது. இக்கல்வியாண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவிகள் பிரிவில் 205 பேருக்கும், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர் பிரிவில் 385 பேருக்கும் கல்வி உதவித்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பெற்று வரப்பெறுகிறது.

**கல்லூரியின் வளர்ச்சிப் பணிகள்**

இக்கல்லூரியில் இவ்வாண்டு நூலகத்திற்கு இரண்டரை லட்சம் ரூபாய் என்ற அளவில் நூல்கள் வாங்கப்பெற்றுள்ளன. திருவாடானை, ஆர். எஸ். மங்கலம் ஆகிய இரு பஞ்சாயத்துகளில் இருந்து மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் போட்டித் தேர்வுகளுக்களுக்கான ஆயிரத்திற்கு மேற்பட்ட புத்தகங்கள் பெறபட்டுள்ளன. இக்கல்வியாண்டில் காட்சித் தொடர்பியல் துறைக்குப் புதிய புகைப்பட, ஒளிப்பதிவுக் கருவிகள் வாங்கப்பெற்று ஒரு செய்முறை பயிற்சிக் கூடம் உருவாக்கப்பெற்றுள்ளது. மேலும் மாணவ மாணவியர் உடல் திறன் கருதி புதிய கால்பந்து மைதானம், கைப்பந்து மைதானம் ஆகியன உருவாக்கப்பெற்றுள்ளன. மேலும் மாணவ மாணவியரின் இருசக்கர வாகனங்கள் நிறுத்த கூடம் அமைக்கப்பெற்றுள்ளது.

கல்லூரிக்கென திறந்த வெளி அரங்கம் உருவாக்கப்பெற்றுள்ளது. கல்லூரிக்கென ஓர் இணையதளம் உருவாக்கப்பெற்றுள்ளது. அதன் முகவரி gasctvd.in என்பதாகும். இக்கல்வியாண்டில் நிலக்கோட்டை அரசு கலைக் கல்லூரியில் இருந்து ஐந்து இரும்பு அலமாரிகள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாண்டு அனைத்துத் துறைகளிலும் மன்றக் கூட்டங்கள் சிறப்புடன் நடத்தப்பெற்றன. ஆங்கிலத் துறை மன்றக் கூட்டம் 13.3.2019 அன்று முதல்வர் எம். சுப்பிரமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் அழகப்பா பல்கலைக்கழக ஆங்கிலத்துறையின் உதவிப் பேராசிரியர்முனைவர் எம். நடராசன், திருமதி ப. மணிமேகலை, செல்வி நந்தினீஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டுச் சிறப்புரையாற்றினர்.

கணினி அறிவியல் துறையின் மன்றக் கூட்டம் 26.3.2019 அன்று முற்பகல் முதல்வர் அ்வர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் மேலூர் அரசு கலைக்கல்லூரியின் கணினித் துறைத்தலைவர் முனைவர் எம். ரவீந்திரன் கலந்து கொண்டுச் சிறப்புரையாற்றினார்.

தமிழ்த்துறையின் மன்றக் கூட்டம் 26.3.2019 அன்று நண்பகல் முதல்வர் ம. சுப்பிரமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் மேலூர் அரசு கலைக்கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் அம்பை மணிவண்ணன் அவர்கள் தமிழர் கோயில்கலை பற்றிக் காட்சியுரை வழங்கினார்.

வணிகவியல் துறையின் மன்றக் கூட்டம் 27.3.2019 அன்று முதல்வர் முனைவர் எம். சுப்பிரமணி தலைமையில் நடைபெற்றது. இதில் காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் வணிகவியல் துறைத்தலைவர், திரு. எஸ். ராஜா முகம்மது அவர்கள் கலந்து கொண்டுச் சிறப்புரையாற்றினார்.

கணிதத் துறையின் மன்றக் கூட்டம் முதல்வர் அவர்கள் தலைமையில் தேவகோட்டை, ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியின் கணிதத்துறையின் உதவிப் பேராசிரியர் திரு டி. கண்ணன் அவர்கள் சிறப்புரையாற்றிட 27.03.2019 அன்று நடைபெற்றது.

இவ்வாறு அனைத்து மன்றக் கூட்டங்கள் இவ்வாண்டு சிறப்புடன் நடைபெற்றன்

**<u>ஆசிரியர்களின் கல்வி சார் பணிகள்</u>**

முனைவர் மு.பழனியப்பன் தமிழ்நாடு அரசு உயர்கல்வி மையத்தின் வழியாக ‘‘தொண்டியின் வரலாறும், நாட்டுப்புற இலக்கிய வளங்களும் ” என்ற தலைப்பில் ஓர் ஆய்வுத்திட்டத்தை முடித்துள்ளார்.திருமதி ப. மணிமேகலை, ஆங்கிலத்துறைத்தலைவர் அவர்கள் தன்னுடைய முனைவர் பட்ட ஆய்வேட்டினைப் பாரதியார் பல்கலைக்கழகத்தில் இவ்வாண்டு சமர்ப்பித்துள்ளார். இவர் புத்தாக்கப்பயிற்சியைத் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் முடித்துள்ளார். ஆங்கிலத் துறை பேராசிரியர் திரு. ஈ. சுரேஷ் இரு ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். இவர் குமார பாளையம், ஜேகேகே கல்லூரியில் நடைபெற்ற வேலைவாய்ப்பு பயிற்சி முகாமில் பயிற்றுநராகக் கலந்து கொண்டார். ஆங்கிலத் துறை சார்ந்த திருவாளார்கள் எஸ். சரவணன், ஆர்.சரவணன், ஏ. சரத் குமார் ஆகியோர் தங்களுடைய முனைவர் பட்ட ஆய்வேட்டினை அழகப்பா பல்கலைக்கழகத்தில் அளித்துள்ளனர். இவர்கள் ஆய்வுக் கட்டுரைகளும் வழங்கியுள்ளனர். கணினி அறிவியல் துறை சார்ந்த திருமதி எஸ் ஷர்மிளா செல்வி பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு கட்டுரை வழங்கினார். தமிழ்த்துறை ஆசிரியர் திருமதியர் சு. தொண்டியம்மாள், க.சத்யா, மற்றும் பெ. வித்யா ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கினர். தேசியக் கருத்தரங்கில் வணிகவியல் துறை சார்ந்த திருமதி கே. மலர்விழி ரேகா, திரு, கே. ராஜேஷ் ஆகியோர் ஆய்வுக்கட்டுரை வாசித்தனர்.வணிவகவியல் துறையைச் சார்ந்த, திரு. கே. இளையராஜா என்பவர், திருநெல்வேலி மனோன்மணீயம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஆறுநாள் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டதுடன், சருகணி இதயா கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் கட்டுரை வாசித்தார்.

<u>மாணவர்கள் கல்வி சார் பணிகள்</u>

11.7.2018 அன்று சட்டவிழிப்புணர்வு முகாம் மாணவர்களுக்கு நடைபெற்றது. இதனை வட்டாரச் சட்டப் பணிகள் குழு நடத்தியது. இதில் நீதிபதி மாண்பமை ம. ராமலிங்கம், நீதிபதி மாண்பமை ப. பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சட்ட ஆலோசனைகள் வழங்கினர்.

26.7.2018 கள விளம்பரத்துறை நடத்திய ஒருநாள் சுய தொழில் தொடங்கல் குறித்த விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. 27.7.18 அன்று நேரு யுவகேந்திரா சார்பில் இளையோர் பாராளுமன்றம் மாணவர்கள் பங்கேற்புடன் நடைபெற்றது.

3.8.18 அன்று வளர் இளம் பெண்களுக்கான தனி உரிமை மேம்பாட்டுத்திட்டம் சார்பில் மகளிர்க்கான வழிப்புணர்வு நடைபெற்றது,

21.8.2018 அன்று வேலை வாய்ப்பு விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடைபெற்றது. 19.9.2018 அன்று மாநில தொழில் முனைவோர் அமைப்பின் நிதி வழியாக, மாணவர் தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாம் மாவட்ட ஆட்சியர் வழிகாட்டலின்படி ஆங்கிலத்துறைத்தலைவர் பேரா. ப. மணிமேகலை அவர்களின் ஒருங்கிணைப்பில் நடத்தப்பட்டது. இதில் நூறு மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். திரு டேனியல் பிரேம்நாத் அவர்கள் கலந்து கொண்டுப் பயிற்சி அளித்தார்.

20.9.2018 விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவு 125 ஆவது ஆண்டுச் சிறப்புக் கூட்டம் இராமநாதபுரம் இராமகிருஷ்ண மடத்தினரால் நடத்தப்பட்டது.

22.9.2018 அன்று தூய்மை இந்தியா 2018 ஊரக வளர்ச்சித் திட்டம் சார்ந்த திருமதி கெட்ஸி லீமா அவர்களால் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

11.10.2018 அன்று பெண்குழந்தைகளைப் பாதுகாத்தல் குறித்தான இலக்கியப் போட்டிகள் நடத்தப்பெற்றன. 12.10 2018 அன்று உலகப் பெண் குழந்தைகள் பாதுகாப்புதினம் கொண்டாடப்பட்டது. 23.10.2018 அன்று உலக மக்கள் தொகை தினம் கொண்டாடப்பட்டது. 27.10.2018 அன்று விரிவாக்கச் செயல்பாடாக மாணவ மாணவியர்க்கு யோகா பயிற்சி வழங்கப்பட்டது. மேலும் நில வேம்பு குடிநீரும் வழங்கப்பட்டது.

26.10.18 அன்று தேர்தல் மற்றும் வாக்களார் விழிப்புணர்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. 11.1.2019 அன்று இளையான்குடி சாகிர் உசேன் கல்லூரியில் நடைபெற்ற தைத்திருநாள் இலக்கியப் போட்டிகளில் நம் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். இக்கல்லூரியில் சமத்துவப் பொங்கல் விழா 11.1.2019 அன்று சிறப்புடன் கொண்டாடப்பெற்றது.

2.2. 2019 அன்று அழகப்பா பல்கலைக்கழத்தின் அழகு ஆரம் போட்டிகளில் நம் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டிகளில் கோலப்

போட்டி, துணுக்கு ஓவியப் போட்டி ஆகியவற்றில் மூன்றாம் பரிசுகளைச் செல்வி அஜிதா ( பி.ஏ ஆங்கிலம் முதலாமாண்டு) பெற்றார். மௌன நாடகப் போட்டியில் மாணவர்கள் பி. பிரவின் குமார், ஜி. சூர்ய பிரகாஷ், கே. டேனியல், ஏ. செல்வா, பி. மோகன் ராஜ், மற்றும் எம். குமரகுரு ஆகியோர் மூன்றாம் பரிசினை வென்றார்.

21.2.2019 அன்று தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் வணிகவியல் துறை சார்ந்த இருபது மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். 13.3.2019 அன்று சிவகங்கை அரசு பெண்கள் கல்லூரியில் போட்டோ ஷாப் குறித்தான குறித்தான ஒரு நாள் பயிலரங்கில் காட்சித் தொடர்பியல் துறை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பரமக்குடி அரசு கலைக்கல்லூரியும் வளரி இதழும் நடத்திய கவிதைப்போட்டியில் இளங்கலை தமிழ் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவர் வி. செல்லம் முதல் பரிசு பெற்றுள்ளார். வாக்களார் விழிப்புணர்வு குறித்த குறும்படப் போட்டியில் பிஎஸ்ஸி விஷுவல் கம்யுனிகேசன் துறை மாணவர்கள் கலந்து கொண்டு மாவட்ட அளவில் பரிசு பெற்றனர். **<u>கல்லூரியில் செயல்பட்டு வரும் பிற அமைப்புகள்</u>**

இக்கல்லூரியில் நாட்டுநலப்பணித்திட்டம், இளையோர் செஞ்சிலுவைச் சங்கம், மகளிர் மேம்பாட்டுக்குழு, ரெட்ரிப்பன் கிளப், விவேகானந்தர் அமைப்பு, ஈகோ கிளப், முன்னாள் மாணவர்கள் சங்கம், பெற்றோர் ஆசிரியர்கழகம் ஆகியன சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன.

ரெட்ரிப்பன் கிளப் சார்பில் 20.8.2018 அன்று டெங்கு விழிப்புணர்வுப் பேரணி நடத்தப்பட்டது. 19.9.2018 அன்று இரத்ததான முகாமை நாட்டுநலப்பணித்திட்டம், செஞ்சிலுவைச்சங்கம், ரெட் ரிப்பன் கிளப் ஆகியன இணைந்த நடத்தின. இதில் 75 மாணவர்கள் இரத்த தானம் கொடுத்தனர்.

30.10.2018 அன்று பாண்டுகுடி ஆரம்ப சுகாதார நிலையத்துடன் இணைந்து ரெட்ரிப்பன் கிளப் மாணவர்களுக்கு நிலவேம்புக் குடிநீர் அளிக்கும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 2.11.2018 அன்று திருவாடானை அரசு மருத்துவமனையின் நம்பிக்கை மையத்துடன் இணைந்து பெண்கள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு தரப்பட்டது.

அழகப்பா பல்கலைக்கழகத்தின் இளையோர் செஞ்சிலுவைச் சங்கச் சார்பில் ஒருநாள் அலுவலர் பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது. இதில் கணிதத்துறை ஆசிரியர் திரு. பி.பாலசுப்பிரமணியன் கலந்து கொண்டார்.

நாட்டுநலப்பணித்திட்டத்தின் சார்பில் 21.6.2018 அன்று சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. 15.8.2018 அன்று கல்லூரி வளாகத்தில் நிழல் தரும் மரங்கள் நடப்பட்டு மரம் நடுவிழா கொண்டாடப் பெற்றது. 25.1.2019 அன்று வாக்காளர் தினப் பேரணி மாணவர்களைக் கொண்டு நாட்டுநலப்பணித்திட்டத்தினால் நடத்தப்பட்டது. நாட்டுநலப்பணித்திடடத்தின் சார்பில் 13.3.2019, 14.3.2019 ஆகிய இருநாள்களில் கல்லூரி வளாகம் சுத்தம் செய்யப்பட்டது. 22.3.2019 அன்று வாக்களிக்கும் இயந்திரப்பயன்பாடு குறித்து செய்முறைப் பயிற்சி நாட்டுநலப்பணித்திட்டத்தின் சார்பில் நடத்தப்பெற்றது.

இவ்வாறு திருவாடானைப் பகுதியில் உயர்கல்வி வளர இக்கல்லூரி நாளும் பணி செய்து வருகிறது, .